**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

**C.C. No: 179 of 2024**

**DATE : 25.11.2025**

**Depositions of witness for Prosecution**

**PW : 6**

| | | | |
|---|---|---|---|
| **Name** | மாரிக்கனி | **Caste** | |
| **Father/ Husband's Name** | | **Calling** | |
| **Village** | | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of November 2025**

**(4 முதல் 7 வரையிலான எதிரிகள் ஆஜர். 1, 3, 8 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் திரு. கார்த்திக்குமார் ஆஜர்)**

**முதல் விசாரணை : –**

1) நான் மகாராஜபுரத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 18.08.2020 அன்று மாலை 5 மணிக்கு, எங்கள் தெருமுன்பு நானும், கீதா என்பவரும் நின்று கொண்டிருந்த பொழுது போலீசார்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் கீதா என்பவரும் கையெழுத்து செய்தோம். என்னுடன் கையெழுத்து செய்த கீதா என்பவர் காலம் சென்று விட்டார். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சம்பவ இடத்திலிருந்து காவலர்கள் கம்பு மற்றும் அருவாள்

ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். **அத்தாட்சி அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் கையெழுத்து மட்டும் போட தெரியும். நான் எந்த தெருவில் குடியிருந்து வருகிறேன் என்றால் மகாராஜபுரம் மேல தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சம்பவ இடத்திற்கு அருகே யார் வீடெல்லாம் இருக்கிறது என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சந்தனகுமார் என்பவரின் வீடும், முத்து என்பவரின் வீடும் உள்ளது.

வழக்குச் சொத்துக்கள் என் முன்னிலையில் கைப்பற்றியதாக சொல்லியுள்ள நிலையில் அதன் வடிவம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சம்பவ இடத்திலிருந்து கம்பு கைப்பற்றியதாக சொல்லியுள்ள நிலையில் அதன் நீளம் எவ்வளவு இருக்கும் என்றால் சாட்சி தன்னுடைய கையை காண்பித்து அவருடைய கை அளவில் இருக்கும் என்கிறார். சாட்சி கார்த்திக் என்னுடைய மருமகன் என்றால் சரிதான். அருவாளை காண்பித்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியுமா என்றால் ஞாபகம் இல்லை. சம்பவ இடத்தில் நான் இல்லை என்றும், கார்த்திக் எனது மருமகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு